RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 274 | அக்டோபர்.5 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## நாட்டில் 24% வரி செலுத்தும் 0.5% ஜெயின் சமூகம்: அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு



புதுடெல்லி, அக்.05-

நாட்டின் மக்கள் தொகையில் ஜெயின் சமூகத்தின் எண்ணிக்கை 0.5 சதவிகிதம். ஆனால் இவர்கள் நாட்டின் மொத்த வரி பங்களிப்பில் 24 சதவிகிதம் செலுத்துவதாக மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் பாராட்டியுள்ளார்.

ஹைதராபாத்தில் ஜெயின் சர்வதேச வர்த்தக அமைப்பு இணைப்பு 2025 மாநாடு நடைபெற்றது. இதில் முக்கிய விருந்தினராகப் பங்கேற்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றினார். இந்த மாநாட்டில் பங்கேற்று அவர் பேசியபோது, “இந்திய பொருளாதாரத்தில் ஜெயின் சமூகத்தினரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவர்கள் மக்கள் தொகையில் 0.5% மட்டுமே உள்ளனர்.

ஆனால், இவர்கள் வரியில் சுமார் 24% பங்களிக்கின்றனர். சிறிய மக்கள் தொகை இருந்தபோதிலும், ஜெயின் சமூகத்தினர் இந்திய பொருளாதாரத்தின் முக்கிய தூணாக உருவெடுத்துள்ளனர். மருந்துத் துறையாக இருந்தாலும் சரி, விமானப் போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக இருந்தாலும் சரி, ஜெயின் சமூகத்தினர் அனைத்திலும் முன்னணியில் உள்ளனர்.

மருந்து, விமானப் போக்குவரத்து, நகைகள், ரியல் எஸ்டேட் மற்றும் கல்வி போன்ற துறைகளில் ஜெயின் மக்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றனர். இந்தியாவின் பல துறைகளை இவர்கள் முன்னோக்கி எடுத்துச் செல்கின்றனர். சன் பார்மாவின் திலீப் ஷாங்வி, இண்டிகோ ஏர்லைன்ஸின் ராகேஷ் கங்வால் மற்றும் ஜெயின் இரிகேஷன் நிறுவனத்தின் பவர்லால் ஜெயின் போன்ற பெயர்கள் இந்தியத் துறையில் அலைகளை உருவாக்குகின்றன.

இவர்களது எண்ணிக்கை ஜெயின் சமூகத்தின் பொருளாதார வலிமையைப் பிரதிபலிக்கிறது. அவர்களின் மத நம்பிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இந்த சமூகம் பாரம்பரியமாக வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தில் கவனம் செலுத்தி வருகிறது. ஜெயின்கள் வரித் துறைக்கு பங்களிப்பு செய்வது மட்டுமல்லாமல், நாட்டின் மிகப்பெரிய வணிகங்கள் பலவற்றையும் ஆதரிக்கின்றனர்.’ எனத் தெரிவித்தார்.

மொத்த வருமான வரி வசூல் இந்தியாவின் 2025 26 நிதியாண்டுக்கான நிகர நிறுவனமற்ற வரி வசூல் ரூ. 5.8 லட்சம் கோடியாக இருந்தது. இதில் தனிநபர்கள், எச்யூஎப் மற்றும் நிறுவனங்களின் புள்ளிவிவரங்களும் அடங்கும். இது முந்தைய ஆண்டை விட 9.18 சதவிகிதம் வளர்ச்சியைக் குறிக்கிறது.

## 2026 தேர்தலில் பிராமணர்களுக்கு 5 இடங்களில் போட்டியிட வாய்ப்பு: நாம் தமிழர் கட்சி முக்கிய முடிவு



சென்னை, அக்.05-

தமிழகத்தில் நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை களமிறக்கவும், பிராமணர்களுக்கு 5 இடங்களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி கொண்டிரு க்கிறது.

இதையொட்டி ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான வியூகம் அமைத்தல், கூட்டணி பேச்சுவார்த்தை, தங்களது கட்சிகளின் வேட்பாளர்களை தேர்வு செய்தல், பூத் கமிட்டிகளை வலுப்படுத்துதல் போன்ற தேர்தல் பணிகளில் தீவிர கவனம் செலுத்திவருகின்றன.

அதற்கேற்ப கட்சிகளின் தலைமை, மாவட்ட அளவில் கலந்தாய்வு கூட்டங்கள், பரப்புரை கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் 2026 தேர்தலில் நாம் தமிழர் கட்சியும் தேர்தலுக்கான களப் பணிகளில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது.

அதன்படி தேர்தலுக்கு ஓராண்டு காலத்துக்கு முன்பாகவே தனித்துத்தான் போட்டி என்று அறிவித்து, கட்சி உட்கட்டமைப்பு பணிகளில் நாம் தமிழர் கட்சி கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை நிறுத்தவும், பிராமணர்களுக்கு 5 இடங் களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் (ஐபிஎல்) இரா.ஐயனார் கூறுகையில், “நாம் தமிழர் கட்சி 2026 தேர்தலுக்கான பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை தேர்தலையொட்டி 150க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை தொகுதி பங்கீடு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் சரிசமமாக வழங்கப்படும். அந்தவகையில் 2026 தேர்தலில் 234 தொகுதிகளில் தலா 117 பெண்கள், 117 ஆண்கள்

நிறுத்தப்பட உள்ளனர்.

குறிப்பாக இந்தமுறை அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண்களுக்கே வாய்ப்பளிக்கப்பட உள்ளது. அதேபோல் இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் முன்னெடுக்காத வகையில் முதல்முறையாக 5 இடங்களில் பிராமணர்களுக்கு வாய்ப்பளிக்க உள்ளோம். இதற்கு முன்பு தமிழக அரசியல் வரலாற்றில் கும்பகோணம் அல்லது மயிலாப்பூர் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டுமே பிராமணர்களுக்கு இதர கட்சிகளில் வாய்ப்பளிக்கப்படும்.

ஆனால் 2026 தேர்தலில் முதல்முறையாக பிராமணர்களுக்கு அதிகப்படியான இடங்களை நாம் தமிழர் கட்சி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த 5 பேரில் நான்கு பேர் பெண்களாவர்.

இந்த வேட்பாளர்கள் சென்னையில் மயிலாப்பூர், ஆலந்தூர், தி.நகர், சைதாப்பேட்டை ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிட உள்ளனர். இவர்கள் உட்பட சென்னையில் உள்ள 16 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் வேட்பாளர் தேர்வு நிறைவடைந் துள்ளதும் குறிப்பிடத்தக்கது” என்று தெரிவித்தார்.

## திருப்பூர் குமரனையும், சுப்பிரமணிய சிவாவையும் நினைவுகூர்ந்து வணங்குவோம்



புதுடெல்லி: அக்.5-

பாரத மாதாவின் இரு தவப் புதல்வர்களான திருப்பூர் குமரன் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரை நினைவுகூர்ந்து வணங்குவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

திருப்பூர் குமரன் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரின் பிறந்த நாள் இன்று. இதை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இன்று நாம், பாரத மாதாவின் இரு தவப் புதல்வர்களான திருப்பூர் குமரன் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரை நினைவுகூர்ந்து வணங்குவோம். உன்னதமான தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவரும், இந்தியாவின் விடுதலைக்காகவும், தேசப்பற்று உணர்வை விதைப்பதற்காகவும் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தவர்களாவர்.

திருப்பூர் குமரன், தன் இறுதி மூச்சுவரை நமது தேசியக் கொடியை ஏந்தி உயிர் தியாகம் செய்தார், இதன் மூலம் அசாத்திய துணிச்சலையும் தன்னலமற்ற தியாகத்தையும் அவர் வெளிப்படுத்தினார். சுப்ரமணிய சிவா, தமது தைரியமான எழுத்து மற்றும் அனல் பறக்கும் உரை வீச்சின் மூலம் எண்ணற்ற இளைஞர்களிடையே கலாச்சார பெருமிதத்தையும், தேசப்பற்றையும் விதைத்தார்.

இவ்விரு மாமனிதர்களின் முயற்சிகள், நம் அனைவரின் நினைவிலும் நீக்கமற நிறைந்திருப்பதுடன், காலனித்துவ ஆட்சியிலிருந்து நமது விடுதலையை உறுதி செய்த ஏராளமான மக்களின் போராட்டங்களையும் இன்னல்களையும் நமக்கு நினைவூட்டுகின்றன. தேச ஒற்றுமை மற்றும் வளர்ச்சியை நோக்கி நாம் அனைவரும் முன்னேற, இவர்களது பங்களிப்புகள் நமக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்" என்று தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 1904ம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி பிறந்தவர் திருப்பூர் குமரன். 1932ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கியபோது, தமிழகம் முழுவதும் அறப்போராட்டம் தொடங்கியது. அப்போது, தேசபந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் திருப்பூரில் நடத்திய போராட்டத்தில் திருப்பூர் குமரன் பங்கேற்றார். 1932, ஜனவரி 10ம் தேதி அவர் கையில் தேசியக் கொடியை ஏந்தி தொண்டர் படைக்கு தலைமை ஏற்று அணிவகுத்துச் சென்றபோது காவலர்களால் தாக்கப்பட்டார். இறுதிவரை தேசியக் கொடியை ஏந்தியபடி மயங்கி விழுந்த அவர், மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டு ஜனவரி 11ம் தேதி உயிரிழந்தார். இதனால், அவர் கொடிகாத்த குமரன் என்றும் அழைக்கப்படுகிறார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் 1884, அக்டோபர் 4ம் தேதி பிறந்தவர் சுப்ரமணிய சிவா. அரசியலையும் ஆன்மிகத்தையும் இணைத்து விடுதலைக்காகப் போராடிய இவர், மிகச்சிறந்த மேடைப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர். வ.உ. சிதம்பரம், மகாகவி சுப்ரமணிய பாரதி ஆகியோரோடு நெருங்கிப் பழகிய சுப்ரமணிய சிவா, பலமுறை கைதாகி சிறை தண்டனை அனுபவித்தவர். தொழுநோய் காரணமாக 1925, ஜூலை 23ம் தேதி தனது 40ஆவது வயதில் சுப்ரமணிய சிவா உயிரிழந்தார்.

## கரூர் துயரம்: ஒரு வாரத்துக்குப் பின் தவெக சார்பில் நேரில் ஆறுதல்



கரூர், அக்.05-

கரூரில் தவெக தலைவர் விஜய் உத்தரவின் பேரில், உயிர் இழந்தவர்கள் குடும்பத்தினரை முதன்முறையாக தவெக கரூர் மாவட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

கரூரில் கடந்த 27 ஆம் தேதி நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பிரச்சாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ஏற்கெனவே, உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை கரூர் மாவட்ட நிர்வாகிகள் சேகரித்து, அந்தப் பட்டியலை தமிழக வெற்றி கழகத்தின் தலைமைக்கு அனுப்பி வைத்த நிலையில், தற்போது பாதிக்கப்பட்டவர்களை விஜய் உத்தரவின் பேரில் தவெகவினர் நேரில் சந்தித்து வருகின்றனர்.

மேலும், விரைவில் கட்சியின் தலைவர் விஜய் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க இருப்பதாகவும், உரிய உதவிகள் செய்து தருவதாக உறுதி அளித்து வருகின்றனர். இந்த சந்திப்புகளின்போது தவெக மேற்கு மண்டலச் செயலாளர் பாலு உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கரூர் துயரக்குப் பின்னால்... கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27ல் நடந்த தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். ஆனால், அன்று இரவே திருச்சி வந்த விஜய், தனி விமானம் மூலம் உடனடியாக சென்னை திரும்பினார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து சென்னை வந்த சில மணி நேரங்களில் அவர் ஓர் இரங்கல் ட்வீட்டை வெளியிட்டார். அதில் விஜய், “இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன். தாங்க முடியாத, வார்த்தைகளால் சொல்ல முடியாத வேதனையிலும், துயரத்திலும் உழன்று கொண்டிருக்கிறேன். நம் உறவுகளை இழந்து தவிக்கும் பெருந்துயர்மிகு மனநிலையில், என் மனம் படுகிற வேதனையை எப்படி சொல்வதென்றே தெரியவில்லை.

கண்களும், மனசும் கலங்கித் தவிக்கிறேன். நான் சந்தித்த உங்கள் எல்லோருடைய முகங்களும் என் மனதில் வந்து போகின்றன. என் சொந்தங்களே, நம் உயிரனைய உறவுகளை இழந்து தவிக்கும் உங்களுக்கு, சொல்லொணா வேதனையுடன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்ளும் அதே வேளையில், இந்த பெரும் சோகத்தை உங்கள் மனதுக்கு நெருக்கமாக நின்று பகிர்ந்துகொள்கிறேன்.

நமக்கு ஈடுசெய்யவே இயலாத இழப்புதான். யார் ஆறுதல் சொன்னாலும் நம் உறவுகளின் இழப்பை தாங்கவே இயலாது. இருந்தும், உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உறவை இழந்து தவிக்கும் நம் சொந்தங்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.20 லட்சமும், காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்கு தலா ரூ.2 லட்சமும் அளிக்க எண்ணுகிறேன்.

இழப்புக்கு முன்னால் இது ஒரு பெரும் தொகையன்றுதான். ஆனாலும், இந்த நேரத்தில், எனது உறவுகளான உங்களுடன் மனம்பற்றி நிற்க வேண்டியது உங்கள் குடும்பத்தை சேர்ந்தவனாக என் கடமை. அதேபோல, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அனைத்து உறவுகளும் மிக விரைவில் குணமடைந்து வீடு திரும்ப இறைவனை பிரார்த்திக்கிறேன். சிகிச்சையில் இருக்கும் நம் உறவுகள் அனைவருக்கும் அனைத்து உதவிகளையும் தவெக உறுதியாக செய்யும். இறைவன் அருளால், அனைத்தில் இருந்தும் நாம் மீண்டு வர முயற்சிப்போம்.” என்று தெரிவித்திருந்தார்.

‘களத்தில் காணோமே’

விஜய்யின் ட்வீட் வெளியான நிலையில், விஜய் கரூர் வந்தால் நிலைமை சிக்கலாகலாம், ஆனால் இரண்டாம் நிலை தலைவர்கள் கூடவா வர இயலாது. மாவட்ட அளவிலான நிர்வாகிகள் எங்கே எனக் கடுமையான விமர்சனங்கள் எழுந்து வந்தன. இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை விஜய் உத்தரவின் பேரில் தவெகவினர் நேரில் சந்தித்து வருகின்றனர். மேலும், விரைவில் கட்சியின் தலைவர் விஜய் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க இருப்பதாகவும், உரிய உதவிகள் செய்து தருவதாக உறுதி அளித்து வருகின்றனர்.

## எச்1பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு

வாஷிங்டன், அக்.05-

எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக அறிவித்த அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் முடிவை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சுகாதார நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்டோரைக் கொண்ட கூட்டமைப்பு ஒன்று, ட்ரம்ப் அறிவித்துள்ள எச்1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அவர்கள் தங்கள் மனுவில், “எச்1பி விசாவுக்கான புதிய விதிமுறைகளை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த செப்டம்பர் 19ல் வெளியிட்டார். அதில், எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2,000 டாலர் என்பதிலிருந்து 5 ஆயிரம் டாலராக கட்டணத்தை அதிகரித்த ட்ரம்ப், தற்போது பன்மடங்கு உயர்த்தி இருப்பது திறமையான வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியிருக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எச்1பி விசா திட்டம், வெளிநாட்டு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கல்வியாளர்களை அமெரிக்காவில் பணியமர்த்துவதற்கான ஒரு முக்கிய திட்டம். இது அமெரிக்காவின் புதுமை மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. சிறப்புத் துறைகளில் பணியாளர்களை நிரப்ப இது அனுமதிக்கிறது.

அரசின் தற்போதைய முடிவால், மருத்துவமனைகள் மருத்துவ ஊழியர்களையும், தேவாலயங்கள், போதகர்களையும், வகுப்பறைகள் ஆசிரியர்களையும், நாடு முழுவதும் உள்ள தொழில்கள் முக்கிய கண்டுபிடிப்பாளர்களையும் இழக்கும் அபாயம் உள்ளது. எனவே, இந்த உத்தரவை தடுத்து, முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான முன் கணிப்புத் தன்மையை மீட்டெடுக்குமாறு கோருகிறோம்” என தெரிவித்துள்ளனர்.

எச்1பி விசா திட்டம், அமெரிக்க நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. அதிக திறமைகளைக் கொண்ட பணியாளர்களை ஈர்ப்பதற்காக கொண்டு வரப்பட்ட இந்த விசா மூலம் அமெரிக்காவில் இருப்போரில் மூன்றில் ஒரு பங்கு பேர், செவிலியர்களாகவும், ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், பாதிரியார்களாகவும், போதகர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# முதலமைச்சர் கோப்பையில் தொடர்ந்து இரண்டு முறை பதக்கங்களை வென்ற வீரவிதை சிலம்ப அகாடமி மாணவி

சிவகங்கை, அக்.05-

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டியில் சிவகங்கை மாவட்டத்தில் சிலம்பத்தில் வெள்ளிப்பதக்கம் வென்று அரசு பள்ளி மாணவி சாதனை.



அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி சிவகங்கையில் படிக்கும் மானாமதுரையைச் சேர்ந்த உடற்கல்வி இயக்குனர் இராமசாமி சாரதா அவர்களின் மகள் ஜெயஸ்ரீ, இவர் வீர விதை சிலம்ப அகாடமியில் மாஸ்டர். கலைவளர் மணி. முனைவர் பெருமாள் அவர்களிடம் பயிற்சி பெற்று வருகிறார். அக்டோபர் 2 முதல் 9ம் தேதி வரை சென்னை தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை நடந்து கொண்டிக்கிறது. இதில் பெண்கள் பிரிவில் 60-70kg எடைப்பிரிவு தொடு முறை போட்டியில் ஜெய ஸ்ரீ வெள்ளிப் பதக்கத்தையும் ஊக்கத்தொகை 75,000 ரூபாய் காசோலையும் வென்றுள்ளார். சிவகங்கை மாவட்த்தில் முதன் முதலாக பெண்கள் பிரிவில் 2024 ம் ஆண்டிற்க்கான முதலமைச்சர் கோப்பையில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை செய்து, 2025 ம் ஆண்டிற்க்கான முதலமைச்சர் கோப்பையில் வெள்ளி பதக்கத்தையும் வென்று சாதனை. தொடர்ந்து இரண்டு முறை பதக்கங்களை வென்று அரசு பள்ளிக்கும், வீரவிதை அகாடமிக்கும் மானாமதுரைக்கும், சிவகங்கை மாவட்டத் திற்க்கும் பெருமை சேர்த்துள்ளார். வெற்றி பெற்ற மாணவிக்கு தலைமை ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்..

# சன் ஃப்ளவர் மழலையர் பள்ளியில் வித்தியாரம்பம் நிகழ்ச்சி ஓம் ஹரி ஸ்ரீ கணபதியே நமா அபிக்னம் ஹஸ்து ஸ்ரீ குருபியோ நமா மந்திரம் எழுதிய மழலையர்கள்

பல்லாவரம், அக்.05-

செங்கல்பட்டு மாவட்டம் விஜயதசமியை முன்னிட்டு பல்லாவரத்தில் உள்ள சன் ஃப்ளவர் மழலையர் பள்ளியில் வித்தியாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், புதிதாக பள்ளியில் சேர்ந்த குழந்தைகளுக்கு நாக்கில் தேன் தடவி, அரிசியில் ஓம் ஹரி ஸ்ரீ கணபதியே நமா அபிக்னம் ஹஸ்து ஸ்ரீ குருபியோ நமா மந்திரம் எழுதி அவர்களின் கல்வி வாழ்க்கையை தொடக்கி வைத்தனர்.இந்துக்களின் முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாக திகழும் நவராத்திரி பண்டிகை ஆண்டுதோறும் ஒன்பது நாட்களுக்கு கொண்டாடப்பட்டு



வருகிறது. நவராத்திரி பண்டிகையில் கொலு பொம்மைகள் வைத்து வழிபாடு நடத்துவது பிரதானமாக விளங்குகிறது. இந்த ஆண்டு நவராத்திரி பண்டிகையானது செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் அக்டோபர் 2 தேதி வரை 11 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் கோயில்களில் விசேஷ பூஜை நடைபெறும். நவராத்திரி வரும் 11 ஆம் நாள் ஆயுத பூஜை என்றும், சரஸ்வதி பூஜை என்றும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் மாணவர்கள் புத்தகங்கள் வைத்து வணங்குவார்கள். விஜயதசமி நாளில் கல்வி, கலைகள் என தொடங்கப்படுகிற எந்த செயலும் வெற்றிகரமாக முடியும் என்பது ஐதீகம் அவ்வகையில் பல்லாவரத்தில் உள்ள சன் ஃபளவர் மழலையர் பள்ளியில் நிறுவனர் மற்றும் தலைமை ஆசிரியர் பிரேமலதா அவர்களின் தலைமையில் விஜயதசமியை முன்னிட்டு இன்று மாணவர் சேர்க்கை நடைபெற்றது. அதில் குழந்தைகளை பெற்றோருடன் அமர வைத்து, ஆரம்பக் கல்வியாக அரிசியில் ஓம் ஹரி ஸ்ரீ கணபதியே நமா அபிக்னம் ஹஸ்து ஸ்ரீ குருபியோ நமா மந்திரம் எழுத வைத்து கல்வியை தொடங்கி வைத்தனர். அதனை தொடர்ந்து பள்ளி தலைமை ஆசிரியர் பிரேமலதா அவர்கள் பொறி மற்றும் இனிப்புகள் வழங்கி ஆயுதபூஜை வாழ்த்துக்கள் தெரிவித்தார். இதில் பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# வண்டலூரில் ரெட் பவுண்டேஷன் சார்பாக மாபெரும் இறகு பந்து போட்டி நடைபெற்றது

வண்டலூர், அக்.05-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த வண்டலூரில் ரெட் பவுண்டேஷன் சார்பாக மாபெரும் இறகுப்பந்து போட்டி நடத்தப்பட்டது இதில் 35 வயது உடையோர் நூற்றுக்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொண்டனர் அதேபோல் 35 வயதுக்கு உட்பட்டவர் 80க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அதேபோல் 30 வயதிற்குட்பட்டவர் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது, இதில் முதல் மூன்று இடம் பிடித்த அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக விடுதலை சிறுத்தைகள் கட்சி ஊடக மையம் மாநில துணைச் செயலாளர் தாம்பரம் கதிரவன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு காசோலை மற்றும் கோப்பைகள் வழங்கி சிறப்பித்தார்.

# மாமல்லபுரத்தில் கடல் சீற்றம்

மாமல்லபுரம், அக்.05-

வங்காள விரிகுடா கடலின் மத்திய மேற்கு பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் மாமல்லபுரம் முதல் புதிய கல்பாக்கம் வரை இன்று காலை மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் கடற்கரை பகுதியிலேயே படகுகளை கயிறு கட்டி பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும், மீன்பிடி வலைகளை பாதுகாப்பான இடத்தில் மீனவர்கள் வைத்துள்ளனர். கடலுக்குள் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வங்க கடலின் மேற்கு திசையை நோக்கி இன்று காலை 40 முதல் 50 கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசுவதால், மாமல்லபுரம் கடல் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக அலைகளின் சீற்றம் அதிகரித்து காணப்படுகிறது. மாமல்லபுரம், கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக குடில்களுக்குமேல் போடப்பட்டிருந்த துணி பந்தல்களும் காற்றில் கிழிந்து அந்தரத்தில் பறக்கிறது. மாமல்லபுரம் கடற்கரைக்கு இன்று காலை நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் மக்களில் பலர், பலத்த காற்று வீசியதால் வீடுகளுக்கு அவசர அவசரமாக திரும்பினர். இதனால் மாமல்லபுரம் கடற்கரை பகுதியில் ஆட்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.




# முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டியில் அன்னை மிரா பொறியியல் கல்லூரி மாணவர்கள் மாபெரும் வெற்றி

ராணிப்பேட்டை, அக்.05-

இராணிப்பேட்டை மாவட்டம், பூட்டுத்தாக்கு, சென்னை டு பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, அன்னை மீரா பொறியியல் கல்லூரி விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் மாபெரும் வெற்றி, தமிழ்நாடு அரசின் விளையாட்டு மற்றும் மேம்பாட்டுத் துறை சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கான முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு போட்டிகள் நடைபெற்றது.

இதில் கல்லூரி பிரிவில் அன்னை மிரா பொறியியல் கல்லூரி அணி கூடைப்பந்து போட்டியில் முதலிடம் பெற்றனர். இந்த அணி மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்றனர். மேலும், இறகுப்பந்து பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ம் இடமும், கைப்பந்து ஆண்கள் பிரிவில் 3ம் இடமும் பெற்று மாபெறும் வெற்றிப் பெற்றுள்ளனர். வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி, விளையாட்டு வீரர்களுக்கு அதை வாழ்த்து தெரிவித்து, சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களளை வழங்கி பாராட்டினார். சாதனை படைத்த மாணவர்களை, அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் நிறுவனத் தலைவர் எஸ்.ராமதாஸ், கல்லூரி செயலாளர் மற்றும் பொருளாளர் ஜி.தாமோதரன் ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர். போட்டிகளில் வெற்றி பெற உறுதுணையாக இருந்த உடற்கல்வி இயக்குநர், கூடைப்பந்து பயிற்சியாளர் ஆகியோர்களை பாராட்டப்பட்டனர். இநிகழ்ச்சியில் கல்லூரி இயக்குநர்கள் பிரசாந்த, கிஷோர், முதல்வர் டி.கே.கோபிநாதன், துணை முதல்வர் டி.சரவணன், நிர்வாக அதிகாரி எஸ். சாண்டில்யன், உடற்கல்வி இயக்குநர் எம்.சதீஷ்குமார் ஆகியோர் விளையாட்டு வீரர்களை பாராட்டி வாத்து தெரிவித்துக் கொண்டனர். இதில் விளையாட்டு வீரர்கள், விளையாட்டு ஆசிரியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# மதுரையில் ராம்ராஜ் காட்டன் 6வது பிரத்யேக ஷோரூம் திறப்பு

மதுரை, அக்.05-

மதுரையில் ராம்ராஜ் காட்டனின் 6வது பிரத்யேக ஷோரூமை மதுரை விளக்குத்தூண் ஏ.வி. துரைக்கண்ணன் நிலக்கிழார் முன்னிலையில், மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தலைவரும், தாளாளருமான கே. ஹரி தியாகராஜன் திறந்து வைத்தார். திறப்பு விழா நிகழ்ச்சியில் ஏராளமான பேர் கலந்து கொண்டனர். புதிய ஷோரூம் திறப்பு விழாவில் பேசிய ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் கே.ஆர். நாகராஜன் கூறுகையில், தமிழகத்தின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமிக்க நகரங்களில் ஒன்றாக திகழும் மதுரையில் எங்களின் 6வது ஷோரூமை திறப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விருப்பமான ஆடைகளை தேர்வு செய்யும் வகையில் இங்கு ஏராளமான ஆடை ரகங்கள் உள்ளன. பாரம்பரியத்தை தினசரி வாழ்வில் கொண்டு வரவேண்டும் என்பதை மனதில் கொண்டு எங்களின் ஒவ்வொரு ஆடைகளும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் எங்களின் இந்த புதிய ஷோரூம் மூலம் மதுரை நகர மக்களுக்கு பாரம்பரியமிக்க ஆடைகள் முதல் நவீன ஆடை ரகங்கள் வரை விற்பனை செய்ய இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# வரதராஜபுரத்தில் 25 ஆண்டுகளாக தனது வீட்டில் கொழு வைத்து வழிப்பாடு 400க்கும் மேற்பட்ட கொழு பொம்மைகள் இடம் பெற்றன

தாம்பரம், அக்.05-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த வரதராஜபுரத்தை சேர்ந்த சதிஷ் ரஞ்சினி தம்பதியினர் தங்களது வீடுகளில் கடந்த 25 ஆண்டுகளாக நவராத்திரியை முன்னிட்டு கொழு வைத்து வழிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த ஆண்டு 25வது ஆண்டாக இந்த ஆண்டு சதிஷ் ரஞ்சினி வீட்டில் நவராத்திரி கொலு வைக்கும் நிகழ்வு கோலாகலமாகத் தொடங்கியது.

குறிப்பாக ஒரு வீட்டில் கடந்த 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொலு வைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுமார் 400க்கும் மேற்பட்ட கொழு இடம் பெற்றன. விவசாயம், தொழில் நிகழ்வு உள்ளிட்ட பல கொழு பொம்மைகள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

நவரத்திரியை முன்னிட்டு 9 நாட்களுக்கு. சிறப்பு பூஜைகள் நடைப்பெற்றது. இதில் அக்கம்பக்கதினர் ஏராளாமானோர் கலந்து கொண்டனர்.

# யூடியூபர் மாரிதாஸ் கைது கரூர் சம்பவம் குறித்து அவதூறு பரப்பியதாக நடவடிக்கை

சென்னை, அக்.05-

கரூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக அரசின் மீது அவதூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாக யூடியூபர் மாரிதாஸ் கைது செய்யப்பட்டார். சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். சென்னை, நீலாங்கரையில் உள்ள வீட்டில் மாரிதாஸ் கைது செய்யப்பட்டார்.





முன்னதாக மாரிதாஸ் தனது எக்ஸ் பக்கத்தில், “இன்று மாலை: நீதிமன்றத்தில் திமுக கும்பல் நடத்திய மொத்த நாடகத்தின் விவரம் வீடியோவாக வெளியிடப்படும். 10 ரூபா பாலாஜி.. விஜய் எதிராக நீதிமன்றத்தில் நடந்த தந்திரம் என்ன மாலை 6 மணிக்கு..” என்று பதிவிட்டிருந்தார். விஜய் தரப்பு உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டும் என்றும் பதிவு செய்திருந்தார். அந்த ட்வீட்டைப் பகிர்ந்த சில நிமிடங்களிலேயே, ”என் இல்லத்திற்கு காவல் துறை கைது செய்ய வந்துள்ளது.” என்றும் ட்வீட் செய்திருந்தார். இந்நிலையில் அவர் கைது செய்யப்பட்டது உறுதியாகியுள்ளது.

கரூரில் கடந்த 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். இதை தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் ‘ரோடு ஷோ’ நிகழ்வுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வில்லிவாக்கத்தை சேர்ந்த பி.ஹெச்.தினேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.


நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதி செந்தில்குமார், “கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இதுதொடர்பான காணொளிகள் வேதனை அளிக்கின்றன. இந்த வழக்கில் 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அனைத்தையும் தமிழக அரசு அனுமதித்திருப்பது அதிருப்தி அளிக்கிறது.

கரூரில் நடந்துள்ள சம்பவம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு. நீதிமன்றம் இதை கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது. பொறுப்பை யாரும் தட்டிக்கழிக்க முடியாது. பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, பெண்கள், குழந்தைகள் உட்பட ஏராளமானோர் உயிரிழந்த நிலையில், கட்சித் தொண்டர்களையும், ரசிகர்களையும் பொறுப்பற்ற முறையில் கைவிட்டுவிட்டு தவெக தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகள் ஓடியுள்ளனர். அவர்களுக்கு தலைமைப் பண்பு இல்லை. சம்பவத்துக்கு பொறுப்பேற்காதது கண்டனத்துக்குரியது.” என்று கூறி வழக்கை நீதிபதி முடித்துவைத்தார்.

இந்நிலையில், இது பற்றி வீடியோ வெளியிடுவதாக மாரிதாஸ் கூறியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். கரூர் விவகாரம் தொடர்பாக சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பியதாக பாஜக கலை மற்றும் கலாச்சார பிரிவு மாநில செயலாளர் சகாயம் (38), தவெக மாங்காடு உறுப்பினர் சிவனேசன் (36), அதே கட்சியின் ஆவடி வட்டச் செயலாளர் சரத்குமார் (32), யூடியூபர் ஃபெலிக்ஸ் ஜெரால்டு உள்ளிட்டோரை சென்னை போலீஸார் கைது செய்திருந்தனர். தற்போது அந்த வரிசையில் மாரிதாஸும் இணைந்துள்ளார்.



■ சோழவந்தான் சட்டமன்ற தொகுதி வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை குருவித்துறை, முள்ளிப்பள்ளம், மற்றும் மன்னாடிமங்கலம் ஊராட்சி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டு பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணவேணி, மன்னாடிமங்கலம் ஊராட்சி செயலாளர் செந்தில், முள்ளிப்பள்ளம் ஊராட்சி செயலாளர் சின்ன மாயன், குருவித்துறை ஊராட்சி செயலாளர் ஒய்யணன், ஆண்டிபட்டி ஊராட்சி செயலாளர் தனலெட்சுமி, திமுக ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# மீண்டும் இணையும் 'சையாரா' படக்குழு

யஷ் ராஜ் நிறுவனம் தயாரிக்கும் அடுத்த படத்தினை இயக்க மோஹித் சூரி ஒப்பந்தமாகி இருக்கிறார்.

மோஹித் சூரி இயக்கத்தில் அஹான் பாண்டே, அனீத் பட்டா உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான படம் 'சையாரா'. யஷ் ராஜ் நிறுவனம் தயாரித்து வெளியிட்ட இப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. 500 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து சாதனை புரிந்தது.

இதனால் இப்படத்தில் பணிபுரிந்த அனைவரையும் அடுத்த படத்துக்கு ஒப்பந்தம் செய்ய பலரும் முன்வந்தனர். குறிப்பாக மோஹித் சூரி இயக்கத்தில் நடிக்க பல்வேறு முன்னணி பிரபலங்கள் முடிவெடுத்து பேச்சுவார்த்தையும் நடத்தி வந்தார்கள். ஆனால், யஷ் ராஜ் நிறுவனம் தயாரிக்கும் அடுத்த படத்தினை இயக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் மோஹித் சூரி.

இப்படம் முழுக்க காதலை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது. இதில் நடிக்கவுள்ள நடிகர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. 2026ம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டு, ஜூன் மாதத்துக்கு மேல் படப்பிடிப்புக்கு செல்ல படக்குழு திட்டமிட்டு இருக்கிறது. இதற்கான ஒப்பந்தங்கள் அனைத்துமே கையெழுத்தாகி முடிந்துவிட்டன.



# ஷாலினிக்கு மீட்சி தருமா 'இட்லி கடை'?

மனதளவில் தொந்தரவு செய்யும் படங்களைத் தொடர்ந்து தந்து வரும் இயக்குநர் பாலா, மிகவும் விரும்பி தமிழில் மறுஆக்கம் செய்த தெலுங்குப் படம், 2017இல் வெளியான 'அர்ஜுன் ரெட்டி'. அந்தப் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி, தமிழ் ரசிகர்களின் அபிமானத்தையும் பெற்றார் ஷாலினி பாண்டே.

ஆனால், அடுத்து அவர் தேர்வு செய்த '100% காதல்' என்கிற தமிழ்ப் படம் தோல்வி அடைந்ததால் தெலுங்கு, இந்திப் படங்களில் அடைக்கலமானார். அவரது நடிப்புத் திறமையை அறிந்து, அவருக்குத் தன்னுடைய 'இட்லி கடை' படத்தில் மீள் அறிமுகம் கொடுத்திருக்கிறார் அப்படத்தின் இயக்குநர், நடிகர் தனுஷ். படத்தில் அருண் விஜய்க்கு ஜோடியாக ஷாலினி பாண்டே வருவதாகச் சொல்கிறது படக்குழு. அவரது 'ரிப்பீட்' அதிர்ஷ்டத்தையும் பார்த்துவிடலாம்.



# வதந்தியால் ஆவேசம் அடைந்த கல்யாணி

மற்ற துறையில் இருப்பவர்களை விட, திரைப்பட நட்சத்திரங்களை பற்றி அதிகமான வதந்திகள் பரப்பப்படுகின்றன. அதை பலர் கண்டுகொள்வதில்லை. தேவைப்பட்டால் மட்டுமே பதிலளிப்பார்கள். 'லோகா சாப்டர் 1: சந்திரா' படத்தின் மிகப்பெரிய வெற்றி மற்றும் வசூல் சாதனையை தொடர்ந்து, கல்யாணி பிரியதர்ஷனை பற்றி ஏராளமான வதந்திகள் வெளியாகின்றன. அதில் ஒரு செய்தியை அவர் கூறியதாக சொல்லப்பட்டது. இதை கவனத்தில் கொண்ட கல்யாணி பிரியதர்ஷன், அதுபற்றி விளக்கம் அளித்துள்ளார். வாழ்க்கை என்றால் என்ன என்பதை உணர வைக்க, தனது தந்தை இயக்குனர் பிரியதர்ஷன், தாயார் நடிகை லிசி ஆகியோர், தன்னையும் மற்றும் தனது சகோதரரையும் ஒரு வாரம் வியட்நாமில் இருக்கும் ஆதரவற்றோர் இல்லத்தில் விட்டுவிட்டு சென்றதாக கல்யாணி பிரியதர்ஷன் சொன்னதாக செய்தி வெளியானது.

இதையறிந்து ஆவேசம் அடைந்த கல்யாணி பிரியதர்ஷன், அதை கடுமையாக கண்டித்தார். இதுபோன்ற ஒரு விஷயத்தை எப்போதும் தான் சொன்னதில்லை என்றும், அது நடக்கவும் இல்லை என்றும் விளக்கம் அளித்த அவர், தயவுசெய்து இதுபோன்ற கருத்துகளை இனிமேல் பரப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். தமிழில் 'ஹீரோ', 'மாநாடு' போன்ற படங்களில் நடித்திருந்த கல்யாணி பிரியதர்ஷன், நடிகர் துல்கர் சல்மான் தயாரிப்பில் நடித்து வெளியான 'லோகா சாப்டர் 1: சந்திரா' என்ற படம், இதுவரை 270 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து, மலையாளத்தில் அதிக வசூல் செய்த படமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

# சினிமா விமர்சனம்: சீரம்




தர்ஷனும், சாருமிஷாவும் தீவிரமாக காதலிக்கின்றனர். சாருமிஷா, தர்ஷனுடன் வீட்டை விட்டு ஓடுகிறார். தர்ஷனை கொல்ல சாருமிஷாவின் முறைமாமன் துடிக்கிறார். பிறகு என்ன நடக்கிறது என்பது மீதி கதை. காதலுக்காக இதயத்தை மாற்றுவது, நாக்கை அறுப்பது என்று பல்வேறு கதைகள் வந்துள்ளன. அதில் மாறுபட்ட இந்த கதை, காதலுக்காக பாலினத்தை மாற்றிக்கொள்வது.

காதலிக்காக திருநம்பியாக மாறும் தர்ஷன், காதலனுக்காக திருநங்கையாக மாறும் 'மாடன் கொடைவிழா' சாருமிஷா இருவரும் கேரக்டருக்கு ஏற்ப இயல்பாகவும், சிறப்பாகவும் நடித்துள்ளனர். டாக்டராக ஷகீலா, போலீசாக ஜி.வி.பெருமாள், ஜெ.மனோஜ், 'பாய்ஸ்' ராஜன், மதுமிதா, 'புதுப்பேட்டை' சுரேஷ், கவுரி, லில்லி, மிலா ஆகியோரும் நன்கு நடித்துள்ளனர்.

திருநங்கைகளை கவுரவப்படுத்தும் கதைக்கு ஏற்ற ஒளிப்பதிவை கே.டோர்னலா பாஸ்கர், பரணிகுமார் வழங்கி இருக்கின்றனர். வி.டி.பாரதிராஜாவின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை ஓ.கே. இயக்குனரும், தயாரிப்பாளருமான ஜி.வி.பெருமாள் கவனத்தை ஈர்த்துள்ளார்.



# கார்மேனி செல்வம் கதை என்ன? இயக்குநர் பகிர்வு

சமுத்திரக்கனி, கவுதம் வாசுதேவ் மேனன் முதன்மை வேடங்களில் நடிக்கும் படம் 'கார்மேனி செல்வம்'. லட்சுமி பிரியா, அபிநயா உள்பட பலர் நடித்துள்ளனர்.

நகைச்சுவை, சென்டிமென்ட் கலந்த குடும்பப் படமாக உருவாகியுள்ள இதை, பாத்வே புரொடக்ஷன்ஸ் சார்பில் அருண் ரங்கராஜுலு தயாரித்துள்ளார். யுவராஜ் தக்ஷன் ஒளிப்பதிவு செய்துள்ளார். ராம் சக்ரி இயக்கியுள்ளார் இவர் ஏற்கெனவே 'குறையொன்றுமில்லை' படத்தை கார்த்திக் ரவி என்ற பெயரில் இயக்கியவர்.

படம் பற்றி அவர் கூறும்போது, "நேர்மையான, உண்மையான மற்றும் உலகளவில் தொடர்புப்படுத்தக் கூடிய கதையை கொண்ட படம் இது. பணத்தின் மீது ஏற்படுகிற ஆசை, ஒருவர் வாழ்க்கையில் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது ஒன் லைன். இதில் சமுத்திரக்கனி, கவுதம் வாசுதேவ் மேனன் இருவருமே இயக்குநர்கள் என்பதால், நடிப்பைப் பெறுவது எளிதாக இருந்தது.

சில இடங்களில் அவர்களிடம் திருத்தம் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. அதற்குச் சரியான விளக்கத்தை அவர்கள் எதிர்பார்த்தார்கள். சொன்னதும் ஏற்றுக்கொண்டு நடித்தார்கள். இருவருக்குமான காட்சிகள் ரசிக்கும்படி இருக்கும். கதை சென்னையிலும் சில காட்சிகள் வெளிநாட்டிலும் நடக்கிறது. இந்தப் படத்தின் இசையை மியூசிக் கிளவுட் ஸ்டூடியோ அண்ட் டெக்னாலஜி எனும் நிறுவனம் அமைத்துள்ளது. வருவாய் பகிர்வு அடிப்படையில் இந்நிறுவனம் இசை அமைத்துள்ளது.

இசை அமைப்பில் இந்த முறை, தமிழ் சினிமாவுக்கு புதிது. இதன் முதல் பாடல் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளது. தீபாவளிக்குப் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்" என்றார்.



# ஷாலினிக்கு மீட்சி தருமா 'இட்லி கடை'?

என் வாழ்வின் முக்கியமான நிகழ்வு கலைமாமணி விருது என்று மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு சார்பில் 2021, 2022, 2023ம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டது. அதில் 2023ம் ஆண்டுக்கான நடிகருக்கான கலைமாமணி விருது பெறவுள்ளார் மணிகண்டன். இந்த விருது வென்றது குறித்து மணிகண்டன் தனது எக்ஸ் தளத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மணிகண்டன், "சிறப்புமிக்க கலைமாமணி விருது எனக்கு வழங்கிய தமிழ்நாடு அரசாங்கத்திற்கு மற்றும் இயல் இசை நாடக மன்றத்துக்கு என் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என் வாழ்வில் இது ஒரு முக்கியமான நிகழ்வாகும். என்னை தொடர்ந்து ஆதரித்து வந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் முக்கியமாக தமிழக மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள். இந்த கவுரவம் உங்களுக்கெல்லாம் சொந்தமானது" என்று தெரிவித்துள்ளார்.



# பாலிவுட்டில் கதாநாயகியாகும் மீனாட்சி சவுத்ரி?

பாலிவுட் நடிகர் ஜான் ஆபிரகாம் தனது போர்ஸ் படத்தின் 3வது பாகத்தை தொடங்க திட்டமிட்டுள்ளார். போர்ஸ் 3 படத்தை இயக்க பாவ் துலியாவை அவர் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், அதற்கான முன் தயாரிப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இதில் மீனாட்சி சவுத்ரி கதாநாயகியாக நடிக்க உள்ளதாக தெரிகிறது. பலரை ஆடிஷன் செய்த பிறகு, ஜான் ஆபிரகாமும் பாவ் துலியாவும் போர்ஸ் 3 படத்தின் கதாநாயகியாக மீனாட்சி சவுத்ரியை தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இது உண்மையாகும் பட்சத்தில் மீனாட்சி சவுத்ரி பாலிவுட்டில் கதாநாயகியாக அறிமுகமாகும் படமாக இது இருக்கும். ஏற்கனவே இவர் "அப்ஸ்டார்ட்ஸ்" என்ற இந்தி படத்தில் துணை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சினிமா விமர்சனம்: ரைட்



ஆர்.டி. எஸ் ஃபிலிம் ஃபேக்டரி , திருமால் லட்சுமணன், டி.ஷியாமளா தயாரிப்பில், சுப்ரமணியன் ரமேஷ் குமார் இயக்கத்தில், நட்டி, அருண் பாண்டியன் , யுவினா இணைந்து நடிக்கும் படம் "ரைட்".

சென்னை கோவளத்தில் ஒரு காவல் நிலையம். அங்கே தனது மகனை காணவில்லை என புகார் கொடுக்க வருகிறார் சக்திவேல் பாண்டியன் ( அருண் பாண்டியன்) . இதற்கிடையில் மந்திரி அரசியல் கூட்டத்திற்கு பாதுகாப்பு கொடுக்க சென்று விடுகிறார் அந்த காவல் நிலைய அதிகாரி ரகுராம் ( நட்டி ) . இதற்கிடையில் காவல் நிலையத்தில் இருக்கும் ஒரு மர்மமான லேப்டாப் மூலம் மொத்த காவல் நிலையத்தையும் தனக்கு கீழே கொண்டு வருகிறான் ஒரு முகம் தெரியாத மர்ம நபர். யாராக இருப்பினும் காவல் நிலையத்திற்குள் வர முடியும் ஆனால் வெளியே போனால் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் பாம் வெடிக்கும். ஏன் எதற்கு அந்த காவல் நிலையம் மட்டும் பணயம் ஆக்கப்படுகிறது முடிவு என்ன என்பது மீதி கதை.

அருண் பாண்டியன் மற்றும் நட்டி கை தேர்ந்த நடிகர்கள் இருவரும் ஒன்றிணைந்து கதையை மிக அற்புதமாக கையாண்டு இருக்கிறார்கள். குழந்தை நட்சத்திரமாக இருந்த யுவினா இந்த படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார். அவருக்கும் நல்வரவு நல்ல கதாபாத்திரம்.

பொதுமக்களுக்கு பிரச்சனை என்றால் காவல் நிலையத்தை நாடுவார்கள் அந்த காவல் நிலையத்திலேயே ஒரு பிரச்சனை என வித்தியாசமாக யோசித்த இயக்குனருக்கு பாராட்டுக்கள். ஆனால் அப்படி ஒரு காவல் நிலையத்தையே கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்த பிறகு கூட காவல் நிலையத்தை சுற்றிலும் கூட காவல் போர்ஸ் வராமல் இருப்பது சற்று சினிமாத்தனம். இந்நேரம் அது நாட்டையே உலுக்கும் ஒரு மிகப்பெரிய செய்தியாக மாறி இருக்கும். அந்தப் பரபரப்பை கொடுக்கத் தடுமாறுகிறது திரைக்கதை. எனினும் சமூகத்தில் தினம்தோறும் செய்திகளில் நாம் படிக்கும் ஒரு பிரச்சனை தான் இதன் அடிநாதம்.. ஏதாவது ஒரு வகையில் இந்த சமூக பிரச்சனையை பேசித்தான் ஆக வேண்டும். என்கிற பட்சத்தில் இந்த கதை கவனம் பெறுகிறது.

பத்மேஷ் மார்த்தாண்டன் ஒளிப்பதிவு காவல் நிலையத்திற்கு உள்ளையே சுற்று சுற்றி எடுத்து கதையை சுவாரசியமாக்கி இருக்கிறது. குணா பாலசுப்பிரமணியன் இசையில் திரைக்கதையின் அழுத்தமும் நன்றாக நமக்குள் கடத்தப்படுகிறது. எடுத்துக்கொண்ட கதை யிலிருந்து விலகாமல் கதை நகர்கிறது. இன்னும் ஆழமாக அழுத்தமாக உணர்வுபூர்வமாக இந்த கதையை கொடுத்திருந்தால் நிச்சயம் " மகாராஜா" போல் மகத்தான வெற்றியையும் கொண்டாட்டத்தையும் சந்தித்திருக்கும். எனினும் இப்போதும் கவனிக்கப்பட வேண்டிய சமூக படமாக மாறி இருக்கிறது.




# கிழக்கு தாம்பரத்தில் தேமுதிக சார்பில் காமராஜர் சிலைக்கு மரியாதை செலுத்தபட்டது

தாம்பரம், அக்.05-

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரம் பாரத மாதா தெருவில் உள்ள காமராஜர் அவர்களின் நினைவு நாளை யொட்டி அவரது திருவுருவ சிலைக்கு தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக செயலாளர் கேட் எம்.தர்மா தலைமையில், கிழக்குப் பகுதி கழகச் செயலாளர் காந்தி எஸ்.சேகர் அவர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமானமா. செழியன் கலந்து கொண்டு காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

இந்த நிகழ்ச்சியில் மேற்கு பகுதி கழகச் செயலாளர் மார்க்கெட் ஞானபால், மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ் மத்திய பகுதி கழகச் செயலாளர் ஆனந்த், மாவட்ட வழக்கறிஞர் துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தெற்கு பகுதி துணைச் செயலாளர் ஏழுமலை, கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் குமார், தெற்கு பகுதி பிரதிநிதி பாலமுருகன், கிழக்குப் பகுதி இளைஞரணி செயலாளர் சங்கர், தெற்கு பகுதி 63வது வட்ட செயலாளர் குமார், கிழக்கு பகுதி 65வத வட்டச் செயலாளர் நாகராஜ், மேற்கு பகுதி 60வது வட்டச் செயலாளர் ராகவன், மத்திய பகுதி இளைஞரணி துணைச் செயலாளர் ரமேஷ், மகளிரணி நிர்வாகிகள் தேமுதிக நிர்வாகிகள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சக்கிமங்கலம் ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சக்கிமங்கலம் எல்.கே.பி நகர் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன்ஸ்டாலின் முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டார். வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிராஜ்,வட்டாட்சியர் மனேஷ்குமார்,சக்கிமங்கலம் ஊராட்சி செயலாளர் மணிகண்டன், ஆண்டார்கொட்டாரம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான், வழக்கறிஞர் கலாநிதி, சக்கிமங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் கூட்ட நெரிசல் விசாரணை: அஸ்ரா கார்க் குழுவில் 2 பெண் எஸ்.பி.க்கள்

சென்னை, அக்.05-

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கை விசாரிக்கும் அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவில், இரண்டு பெண் எஸ்.பி.க்கள் இடம்பெற்றுள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

அதன்படி, நாமக்கல் காவல் கண்காணிப்பாளர் விமலா மற்றுமொரு காவல் கண்காணிப்பாளர் சியாமளாதேவி ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் 3 ஏடிஎஸ்பிக்கள், காவல் ஆய்வாளர்களும் விசாரணைக் குழுவில் இடம்பெற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கரூரில் கடந்த 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். இதை தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் 'ரோடு ஷோ' நிகழ்வுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வில்லிவாக்கத்தை சேர்ந்த பி.ஹெச்.தினேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கை விசாரிக்க, வடக்கு மண்டல ஐ.ஜி.



அஸ்ரா கார்க் தலைமையில், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்படுகிறது. வழக்கு தொடர்பான ஆவணங்களை சிறப்பு புலனாய்வு குழு வசம் கரூர் போலீஸார் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று நீதிபதி செந்தில்குமார் உத்தரவிட்டார்.

இந்நிலையில் அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவில், இரண்டு பெண் எஸ்.பி.க்கள் இடம்பெற்றுள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

யார் இந்த அஸ்ரா கார்க்? அஸ்ரா கார்க் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் கடந்த 2004ம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வானார். தமிழகப் பிரிவில் பணியமர்த்தப்பட்ட இவர் முதன்முதலில் ஏற்றுக் கொண்ட பொறுப்பு திருப்பத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர். 2008ல் திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. ஆனார். கந்துவட்டிக் கொடுமையால் சிக்கித் தவித்த நெல்லையில் அவரது நடவடிக்கைகள் அதிரடியாக அமைந்தது.

அதன்பின்னர் 2010ல் அவர் மதுரை காவல் கண்காணிப்பாளராக பதவி ஏற்றார். கிரானைட் குவாரி முறைகேடு, நில அபகரிப்பு புகார் வழக்குகளை அவர் கையாண்ட விதம் அவர் மீது கவனத்தைத் திருப்பியது. 2016ம் ஆண்டு மத்திய பணிக்குச் சென்றார். பின்னர் 2018ம் ஆண்டு மீண்டும் பதவி உயர்வோடு தமிழகத்துக்கே வந்தார். 2022ம் ஆண்டு ஐஜியாக நியமிக்கப்பட்டார். தற்போது வடக்கு மண்டல ஐஜியாக இருக்கிறார். நேர்மை, துணிச்சலுக்கு பெயர்பெற்ற அஸ்ரா கார்க் காவல்துறையின் பல்வேறு உயரிய விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

இந்நிலையில் தான், கரூர் கூட்ட நெரிசல் வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில், சிறப்பு புலனாய்வு குழுவை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு அமைத்துள்ளது.

# சிவகாசியில் 30% உற்பத்தி குறைவு: பட்டாசு விலை 20% வரை அதிகரிக்க வாய்ப்பு

சிவகாசி, அக்.05-

சிவகாசியில் உரிமம் ரத்து செய்யப்பட்ட பட்டாசு ஆலைகளுக்கு உற்பத்தி அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், ஆய்வு மற்றும் விபத்து அச்சம் காரணமாக முன்கூட்டியே பட்டாசு ஆலைகள் மூடப்பட்டதால் 30 சதவீதம் வரை உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் 20 சதவீதம் வரை விலை உயர வாய்ப்புள்ளதாக உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,080க்கும் அதிகமான பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன.

நாட்டின் மொத்த பட்டாசு தேவையில் 90 சதவீதம் சிவகாசியில் உற்பத்தி செய்யப்படுகிறது. பேரியம் நைட்ரேட் மற்றும் சரவெடி உற்பத்திக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்ததால், பிஜிலி, சக்கரம், புஸ்வானம்,



லட்சுமி, குருவி, மத்தாப்பு, ஆட்டம் பாம், உயரே சென்று வெடிக்கும் பேன்ஸி ஷாட் என 60 சதவீதம் பட்டாசுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

தொடக்கம் முதலே சரிவு: சிவகாசியில் உற்பத்தி செய்யப்படும் பட்டாசுகளில் 10 சதவீதம் தமிழகத்திலும், 90 சதவீதம் வட மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தொடர் விபத்துகள், சிறு பட்டாசு ஆலைகள் போராட்டம், காலநிலை மாற்றம், சஸ்பெண்ட் செய்யப்பட்ட பட்டாசு ஆலைகளில் மீண்டும் உற்பத்தி அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் ஆகியவற்றால் இந்த ஆண்டு தொடக்கம் முதலே பட்டாசு உற்பத்தி சரிவை சந்தித்தது.

மேலும் பட்டாசு ஆலைகளில் விபத்துகளை தடுக்கும் பொருட்டும், பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பது குறித்தும், தொழிலகப் பாதுகாப்புத் துறை, மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டு அமைப்பு, மாவட்ட நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் ஆய்வு செய்கின்றன. விதிமீறல் கண்டறியப்பட்டால் பட்டாசு ஆலைகளின் உரிமம் ரத்து செய்யப்படுகிறது.


விருதுநகர் மாவட்டத்தில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் 85 தொழிற்சாலைகளும், மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு துறையால் 45 பட்டாசு ஆலைகளும் மூடப்பட்டுள்ளன. தற்காலிக உரிமம் ரத்து செய்யப்பட்ட ஆலைகள் விதிகளைப் பின்பற்றி விண்ணபித்தால் 30 நாட்களில் மீண்டும் உரிமம் வழங்கப்படும். ஆனால் உரிமம் ரத்து செய்யப்பட்டு, 3 முதல் 8 மாதங்களுக்கு மேலாகியும், மீண்டும் உற்பத்தி தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படாததால் உற்பத்தி குறைந்துள்ளது.

அதேபோல, கடந்த காலங்களில் ஆய்வின்போது முதல்முறை சிறிய விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்பட்டு, எச்சரிக்கை விடுக்கப்படும். ஆனால் தற்போது சிறிய விதிமீறல்களுக்கும் உரிமம் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் உற்பத்தி அனுமதி வழங்க காலதாமதமாவதால் தீபாவளிக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே பெரும்பாலான பட்டாசு ஆலைகள் உற்பத்தியை நிறுத்திவிட்டன.

இதன் காரணமாக இந்த ஆண்டு பட்டாசு உற்பத்தி 30 சதவீதம் வரை குறைந்துள்ளது. உற்பத்தி குறைந்ததால் தீபாவளி நேரத்தில் பொதுமக்கள் அதிகம் விரும்பும் பேன்ஸி ரக பட்டாசுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, 20 சதவீதம் வரை விலை உயர வாய்ப்புள்ளதாக உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

# தானைத்தலைவர் கலைஞர், பி. திருஞானசம்பந்தம் நினைவுதின பொதுக்கூட்டம், நலத்திட்ட உதவிகள் விழா

## பிடிஆர். முத்து , திருச்சி சிவா, கேஆர். பெரியகருப்பன் தமிழரசி, மாங்குடி பங்கேற்க உள்ளனர்



சிவகங்கை, அக்.05-

சிவகங்கை மாவட்டம் பாகை வாள்கோட்டை நாடு பாகனேரியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டும், பாகை வாள்கோட்டை நாடு மொழிப்போர் தளபதி, சட்டமேலவை மேனாள் உறுப்பினர் பி. திருஞானசம்பந்தம் அவர்களது 45 வது நினைவுதினம் மற்றும் கிளைக்கழக மேனாள் செயலாளர் அழகாபுரி நடராஜன் அவர்களின் 35 வது நினைவு தினம் ஆக மூன்று நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இன்று மாலை ஐந்து மணியளில் பாகனேரியில் நடைபெற உள்ளது.

திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும், பி. திருஞானசம்பந்தம் அவர்களின் மகனுமான பாகை வாள்கோட்டை நாடு பிடிஆர். முத்து ஏற்பாட்டில்

கழக துணைப் பொதுச்செயலாளர், மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி என். சிவா , மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர் கேஆர்.பெரியகருப்பன், மேனாள் அமைச தென்னவன் , சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. தமிழரசி ரவிக்குமார் எஸ். மாங்குடி , சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்...

மேலும் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், சார்பு நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்... நிகழ்ச்சி ஏற்பாடுகளை தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பாகை வாள்கோட்டை நாடு பிடிஆர். முத்து மேற்கொண்டு வருகிறார்...

# 200 வகை துப்பாக்கிகளுக்கு ஆயுத பூஜை செய்த உ.பி. எம்எல்ஏ

புதுடெல்லி, அக்.05-

உ.பி.யின் குற்றப் பின்னணி கொண்ட அரசியல்வாதிகளில் ஒருவர் ராஜா பைய்யா என்கிற ராகுராஜ் பிரதாப் சிங். பிரதாப்கரை சேர்ந்த இவர் 1993 முதல் 2018 வரை தொடர்ந்து சுயேச்சை எம்எல்ஏவாக இருந்தார். உ.பி.யில் ஆட்சிக்கு வரும் கட்சி எதிலும் சேராமலேயே அதன் அமைச்சரவையில் இடம்பெறும் அளவுக்கு அரசியல் செல்வாக்கு கொண்டவர்.

இவ்வாறு, பாஜக, பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி ஆகிய கட்சிகளின் அரசில் அமைச்சராக இருந்தார். 2018ல் ஜன் சத்தா தளம் என்ற தனிக் கட்சி தொடங்கி அதன் சார்பில் பிரதாப்கர் மாவட்டம் குண்டா தொகுதி எம்எல்ஏவாக தொடர்கிறார். ராஜா பைய்யா நேற்று முன்தினம் தனது மாளிகையில் ஆயுத பூஜை கொண்டாடினார். இதில் சுமார் 200 வகை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள் இடம் பெற்றிருந்தன. இவற்றை காண ஏராளமானோர் கூடினர். அவர்கள் பதிவுசெய்த காட்சிகள் வைரலாகி பார்ப்பவரை திகைக்க வைத்துள்ளன.

இவரது மனைவி பனவி குமாரி சிங் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்கிறார். இவர் கடந்த ஜூன் 3ம் தேதி பிரதமர் அலுவலகத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தனது கணவர் ராஜா பைய்யா சட்டவிரோத வெளிநாட்டு ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், பொது அமைதிக்கு அவை அச்சுறுத்தலாக இருப்பதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு அப்போது மறுப்பு தெரிவித்த ராஜா பைய்யா இப்போது அவற்றை பூஜைக்காக காட்சிப்படுத்தி உள்ளார்.

இந்த ஆயுதங்கள் அனைத்தும் தன்னுடையது மட்டுமின்றி குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்களுடையது என்று தெரிவித்துள்ளார் ராஜா பைய்யா. அவரது நெருங்கிய கூட்டாளியும் உ.பி. எம்எல்சியுமான அக ஷ்ய் பிரதாப் சிங், ''இந்த ஆயுதங்கள் சட்டவிரோதமானவை அல்ல. அனைத்தும் உரிமம் பெற்றவை'' என்று கூறியுள்ளார். கடந்த வருடம் லக்னோவுக்கு ஒரு படப்பிடிப்புக்கு சென்றிருந்த நடிகர் ரஜினிகாந்த், தனது நண்பர் எனக் கூறி ராஜா பைய்யாவை அவரது வீட்டில் சந்தித்தது நினைவுகூரத்தக்கது.



# வேலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில், காங்கிரஸ் வழக்கறிஞர்கள் பிரிவு சட்டத் துறை கலந்தாய்வுக் கூட்டம்

வேலூர், அக்.05-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, வேலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில், வேலூர் திருப்பத்தூர், இராணிப்பேட்டை ஆகிய மாவட்ட காங்கிரஸ் வழக்கறிஞர்கள் பிரிவு சட்டத் துறை கலந்தாய்வுக் கூட்டம், காங்கிரஸ் சட்டத்துறை மாவட்ட தலைவர் பு.பாலமுருகன் தலைமையிலும், மாநில நிர்வாகிகள் கிருஷ்ணகுமார் கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் பி.டீக்காராமன், முன்னாள் மாமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் மாவட்ட துணை தலைருமான பி.பி.சந்திரபிரகாஷ், எஸ்சி எஸ்டி துறை மாநில துணை தலைவர் சித்த்ரஞ்சன் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். இறுதியில் வழக்கறிஞர் மகாதேவன் நன்றியுரையாற்றி இக்கூட்டம் நிறைவுபெற்றது.




# தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், அக்.05-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக தாராபுரம் சட்டமன்ற தொகுதி பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர் மற்றும் BLA2, BDA, ஆலோசனை கூட்டம் தாராபுரம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது நிகழ்ச்சியை வரவேற்புரை ஆற்றிய செயற்குழு உறுப்பினர் கே எஸ் தனசேகர் நகர நகர செயலாளர் பொறியாளர் முருகானந்தம் தலைமை தாங்கினார் மண்டல பொறுப்பாளர் உணவு பாதுகாப்பு அமைச்சர் சக்கரபாணி அமைச்சர் சுவாமிநாதன் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளரும் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தொகுதி பொறுப்பாளருமான பிரகாஷ் தொகுதி பொறுப்பாளர். கிழக்கு மாவட்ட செயலாளர் பத்மநாபன் துணை மாவட்ட செயலாளர் முன்னாள் எம்எல்ஏ பிரபாவதி பெரியசாமி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதி ராஜேந்திரன் தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ் வி செந்தில் குமார் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. கே துரைசாமி குண்டடம் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் ருத்ராபதி பேரூர் கிளை செயலாளர் அன்பு சிறப்புரையாற்றினார் மூலனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, பழனிச்சாமி, மக்கள் தண்டபாணி மாவட்டத் துணை இளைஞரணி செயலாளர் ரவிச்சந்திரன் கன்னிவாடி மாவட்ட பிரதிநிதி வடிவேல் நிகழ்சியில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கு எவ்வாறு செயல்படுவேன் என்று ஆலோசனை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது



■ மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம் சோமரசம்பேட்டை அரசு ஊரக சித்த மருத்துவமனை வளாகத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161